1. வாணியம்பாடி நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOUD துறையினர் STAR RATING ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக வாணியம்பாடி நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை, திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி முறையே தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. மேலும் (Secondary Storage) இரண்டாம் நிலை சேகரிப்பு மற்றும் Transportation செய்து முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே வாணியம்பாடி நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free city) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating) பெற சுய உறுதி மொழி சான்றிதழ் (Self Declaration) அனுமதித்து அனுப்பி வைப்பதை பொதுமக்கள் அறியும் பொருட்டு ஏதேனும் ஒரு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மேற்படி விளம்பரத்திற்கு ஆகும் செலவினத் தொகை பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

2. வாணியம்பாடி நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOUD துறையினர் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் STAR RATING வழங்கி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக வாணியம்பாடி நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை, திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி முறையே தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. மேலும் (Secondary Storage) இரண்டாம் நிலை சேகரிப்பு மற்றும் Transportation செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே, வாணியம்பாடி நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free city) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating) பெற சுய உறுதி மொழி சான்றிதழ் (Self Declaration) அனுமதித்து அனுப்பிவைக்க தெரிவிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்: 229/2017/எச்1

3. இந்நகராட்சிக்கு 2020-2021-ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் / பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருப்பத்தூர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.அ4/003/2020, நாள்:05.11.2020-ன்படி நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரு.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.21 ◦ நுருல்லாபேட்டை, சி.என்.ஏ சாலையில் உள்ள நகராட்சி சமுதாய கூட்டத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் மழைநீர் கால்வாயுடன் சிறுபாலம் அமைத்தல் பணி. | 9.00 |
| 2 | வாணியம்பாடி நகராட்சி ◦ சி.என்.ஏ சாலையில் இரயிலவே கிராஸ் அருகில் வடக்கு பகுதியில் உள்ள நகராட்சி சமுதாய கூட்டத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் மழைநீர் கால்வாயுடன் சிறுபாலம் அமைத்தல் பணி. | 6.00 |

அ.கு : மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.1602/2020/இ1.

4. இந்நகராட்சி குடிநீர் நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியின் கீழ் வார்டு எண்.28 பெருமாள்பேட்டை, ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றிற்கு சிறுமின்விசை பம்பு மற்றும் குடிநீர் தொட்டிக்கு மேடை அமைத்தல் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.0.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : குடிநீர் நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியில் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2637/2020/இ2.